## கல்வி அமைச்சு – தென் மாகாணம்

# தென் மாகாண சபை தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ம் வகுப்பின் I (அ) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025

தென் மாகாண சபை தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ம் வகுப்பு – I(அ) தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் தகைமைகள் கொண்டுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தென் மாகாணத்தில் நிரந்தர வதிவிடம் கொண்ட பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக தென் மாகாணத்தினுள் போதிய விண்ணப்பதாரிகள் இல்லாத பட்சத்தில் தென் மாகாணத்திலிருந்து பூரணப்படுத்த முடியாத வெற்றிடங்களை தேசிய மட்டத்தில் இருந்து இந்த ஆட்சேரப்புக்களை மேற்கொள்வதோடு நிலவும் நிதி ஏற்பாடுகள் மற்றும் வெற்றிடங்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். முன்வரும் கலங்களில் ஆட்சேர்ப்பு தொடர்பாக கிடைக்கும் அங்கீகரங்களுக்கு ஏற்ப 2025.03.05 ஆம் திகதி வரையுள்ள வெற்றிடங்களுக்கே இப்பரீட்சை செல்லுபடியானதாகும்.

1. **சம்பள அளவு :**

   **i. 3 ஆம் வகுப்பின் 1(அ) தரத்திற்கு அமைவாக**

   இப்பதவியின் சம்பள அளவு 2022.01.05 ஆந் திகதிய இலக்கம் 03/2016(iv) கொண்ட ஜீ.ஈ.-1-2016 அரச பொது நிருவாக சுற்றறிக்கைற்கு அமைய ரூபா. 31,490 – 6x445 – 7x525 – 2x600 - ரூபா 39,035/-. ஆகும். நீங்கள் இந்த சம்பள அளவில் கட்டம் 14 இல் ரூபா 37,835/- சம்பள மட்டத்தில் அமர்த்தப்படுவீர்கள்.

2. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

   2.1 கல்வித் தகைமைகள் :

   i. கற்பித்தல் செயற்பாட்டிற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட விஷேட துரைகளுக்கு சொந்தமான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினல் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினல் ஏற்றுக்

கொள்ளப்பட்ட பட்டங்கள் வழங்கும் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட உப அட்டவனை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்குரிய பட்டம் ஒன்று பெற்றிருத்தல் வேண்டும். இப் பட்டம் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னரான பட்டம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

மற்றும்

ii. க.பொ.த சாதாரண தரத்தில் தாய்மொழி (தமிழ்) பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மிக முக்கியம்** : (விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் போது கவனத்திற் கொள்ள வேண்டும்.)

- தனது பட்டத்திற்கு அமைய விண்ணப்பிக்க முடியுமான பாடங்கள் தொடர்பில் விண்ணப்பதாரிகள் கவனத்துடன் செயற்பட வேண்டும்.
- பட்டத்திற்காக பயின்றுள்ள பாடம்/ பாடங்களுக்கு அமைவாக மாத்திரமே விண்ணப்பிக்க வேண்டும்..
- மூன்று பாடங்களுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்
- விண்ணப்பிக்கப்பட்ட பாடம் மற்றும் மொழி மூலம் பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

2.2 உடல் மற்றும் உளத் தகுதி –

சகல விண்ணப்பதாரியும் ஆசிரியர் ஒருவராக கடமையாற்ற தகுந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

2.3 வயது

விண்ணப்ப முடிவுத் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாதும் இருக்க வேண்டும்.

2.4 ஏனைய தகைமைகள் –

I. விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரி நற்பண்புகள் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
III. விண்ணப்பதாரி அல்லது வாழ்க்கைத்துணை , விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முந்திய 03 வருடங்களுக்கு குறையாத காலம் தென் மாகாணத்தில் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும். (கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட வதிவுச் சான்றிதழ் (டீ.எஸ். 04) மூலம் நேர்முகப் பரீட்சையின் போது வதிவை

உறுதிப்படுத்த வேண்டும். தென் மாகாணத்திலிருந்து பூரணப்படுத்த முடியாத பட்சத்தில் மாத்திரமே தேசிய மட்டத்தில் இருந்து ஆட்சேரப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

IV. தென் மாகாணத்தில் எந்தப் பிரதேசத்திலும் பணியாற்ற முடியுமாக இருத்தல் வேண்டும்.

3. **சேவை நிபந்தனைகள் :**

I. அரச / மாகாண சபை அரசாங்க சேவை நியமனங்களை கட்டுப்படுத்தும் பொது விதிகளுக்கும், இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகளுக்கும், அதற்கு செய்துள்ள மற்றும் எதிர்வரும் காலங்களில் செய்யப்படும் திருத்தங்களுக்கு அமைவாக தெரிவு செய்யப்படும் பட்டதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு – I(அ) தரத்திற்கு நியமிக்கப்படுவார்கள்.

II. இந்நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியம் உரித்துடையதாகும். இப் பதவிக்கு உரித்தான ஓய்வூதிய முறை தொடர்பில் அரசினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நியமனம் பெறுவோர் உடன்படுதல் வேண்டும்.

III. நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர். நியமனம் பெறும் பாடசாலையில் 5 வருடங்களாவது பணியாற்றுவது கட்டாயமானதாகும்

IV. 2020.10.16 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க அரச பொது நிருவாக சுற்றறிக்கை மற்றும் அதற்கு மேற்கொள்ளும் திருத்தங்கள் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ளவாறு இரண்டாம் அரச கரும மொழி தொடர்பில் தேர்ச்சியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. **ஆட்சேர்ப்பு :**

4.1 ஆட்சேர்ப்பு முறை :

I. 2008.07.01 ஆம் திகதி முதல் அமுலாக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பின் 7.2.4 இன் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

II. முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை நிலவும் வெற்றிடங்களிலும் குறைவாக உள்ளபோது போட்டிப் பரீட்சை நடாத்தாது சாதாரண நேர்முகப் பரீட்சை ஒன்றும் பிரயோகப் பரீட்சை ஒன்றும்

நடாத்தப்பட்டு ஆட்சேர்ப்புச் செய்வதுடன் விண்ணப்பங்கின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கையிலும் அதிகமாக உள்ள போது போட்டிப் பரீட்சை ஒன்றினை நடாத்தி அதன் புள்ளிகள் மற்றும் பிரயோக பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் பிரதேச செயலக ரீதியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

4.2 எழுத்து மூலப் பரீட்சை – இது இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டது.

| பாடங்கள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கு தேவையான குறைந்த பட்ச புள்ளி அளவு |
|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை (நேரம் 01 மணித்தியாலம்) | 100 | 40 |
| பொது அறிவு (நேரம் 01 மணித்தியாலம்) | 100` | 40 |

**பாடத்திட்டம் :**

பாட இலக்கம் 01 - நுண்ணறிவுப் பரீட்சை

பரீட்சார்த்தியிடம் ஆசிரியர் தொழிலுக்காக காணப்படும் திறமைகள் தர்க்க ரீதியிலான அறிவு தொடர்பில் மதிப்பீடு செய்யும் நோக்குடன் இவ் வினாத்தாள் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்க கூடிய வினாக்கள் 50 ஐக் கொண்டதாகும் . இதில் சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

பாட இலக்கம் 02 - பொது அறிவு

தாம் விண்ணப்பிக்கும் ஆசிரியர் துறைக்குரிய அத்துறை தொடர்பாக காணப்படும் பொது அறிவு மற்றும் / அல்லது உள்நாட்டு ரீதியில் ஏற்பட்டுள்ள மற்றும் ஏற்படக் கூடிய கல்வி முன்னேற்றங்கள் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பான பொது அறிவினை பரிசீலனை செய்யக்கூடிய பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக் கூடிய வினாத்தாள்களாகும். இதில் சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

4.3 பரீட்சை ஒழுங்கு விதிமுறைகள் :

(i) இப்பரீட்சை தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும்.
(ii) சகல பரீட்சார்த்திகளும் இப்பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் தோற்ற வேண்டியது ஒரு மொழி மூலம் மாத்திரமாகும். இம் மொழி தாம் நியமனம் பெறவுள்ள மொழி மூலமாக இருக்க வேண்டும்.
(iii) பரீட்சார்த்தி தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தை மாற்றியமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.
(iv) சகல பரீட்சார்த்திகளும் 02 வினாத்தாள்களுக்கும் தோற்ற வேண்டும்.
(v) ஒரு தடவையில் சேர்த்துக் கொள்ளப்படும் எண்ணிக்கை நியமனப் பொறுப்பாளரினால் தீர்மானிக்கப்படும்.

4.4 சாதாரண நேர்முகப் பரீட்சை –

சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் தொடர்புடையதாக பிரசுரிக்கப்படும் வர்த்தமானி அறிவித்தலில் அல்லது பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை கொண்டுள்ளாரா என்பதை பரீட்சித்தல் மற்றும் உடல் தகுதிகளை பரீட்சித்தல்.

4.5 பிரயோகப் பரீட்சை –

பிரயோகப் பரீட்சையாக விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் சமர்பிப்புக்களை மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் இல. | பிரயோகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் நியதிகள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கு தேவையான புள்ளி அளவு |
|---|---|---|---|
| 01 | நோக்கமும் பிரவேசமும் | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் வளம் | 05 | 02 |
| 03 | தொடர்பாடலில் தெளிவு | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 | சமர்பிப்புத் திறமைகள் | 05 | 02 |
| 06 | **மொத்தப் புள்ளிகள்** | **25** | **10** |

4.6 பிரயோகப் பரீட்சை முறைகள் –

I. பிரயோகப் பரீட்சைக்காக 05 நிமிடங்களுக்கு குறையாத காலம் வழங்கப்படும்.

II. பிரயோக பரீட்சையில் பெற்றுக் கொள்ளக்கூடிய உயர்ந்த பரீட்சை புள்ளிகளின் அளவு 25 ஆகும்.

III. பிரயோகப் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவ்வவ் நியதிகளுக்காக குறைந்த பட்சம் 02 புள்ளிகள் வீதம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

IV. பிரயோக பரீட்சை மதிப்பீடுகள் தென் மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை குழுவினால் மேற்கொள்ளப்படும்.

4.7 நியதிகளின் நோக்கம் –

I. நோக்கமும் பிரவேசமும்
வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தை தெளிவுபடுத்தல் மற்றும் பாட பிரவேச இயலுமையினை மதிப்பீடு செய்தல்.

II. ஆளுமை மற்றும் குரல் வளம்
ஆசிரியராக சிறந்த ஆளுமை கொண்ட மற்றும் கற்பிப்பதற்கு சிறந்த குரல் வளப்பிரயோகத்தினை மதிப்பீடு செய்தல்

III. தொடர்பாடலில் தெளிவு
கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் உரிய விடயங்களை பயன்மிக்கதாக தெரிவிக்கக்கூடிய இயலுமையினை மதிப்பீடு செய்தல்.

IV. நேர முகாமைத்துவம்
பெற்றுக் கொள்ளப்படும் கால எல்லைக்குள் நோக்கத்தை எட்டக்கூடிய திறமைகளை மதிப்பீடு செய்தல்.

V. சமர்பிப்புத் திறமைகள்
நோக்கத்தை எட்டுவதற்கான சமர்பிப்புக்கள் கலைசார் முறைகளை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான இயலுமைகளை மதிப்பீடு செய்தல்.

5. பரீட்சைக் கட்டணம் :

நேர்முகப்பரீட்சையின் போது ரூபா. 600 அரவிடப்படும். விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றடங்களின் எண்ணிக்கையிலும் அதிகமாயின் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைக்காக பரீட்சை கட்டணமாக ரூபா. 600 செலுத்தப்பட வேண்டும்.

I. சகல விண்ணப்பதாரிகளும் www.edumin.sp.gov.lk எனும் எமது இணையதளத்திற்கு பிரவேசித்து உரிய தகவல்களை வழங்கி நிகழ்நிலை (Online) மூலம் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து (Submit) பதிவிரக்கம் செய்து கொள்ள வேண்டும். விண்ணப்பத்தினை பூர்த்தி செய்யும் போது உப அட்டவணை 01, 02 இனை பயன்படுத்த வேண்டும்.

II. நிகழ் நிலையில் விண்ணப்பித்து (Online) தரவிறக்கம் (Download) செய்யாத விண்ணப்பங்கள் மற்றும் கணினி மூலம் தயாரித்து அச்சு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சகலதும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

III. பூரணமற்ற தகவல்கள் செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள், அடிப்படை தகைமைகள் பூர்த்தியாகாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்தி தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியொன்று 2025.03.07 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பின்வரும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

IV. விண்ணப்பிக்கும் பாடம், பாடங்களுக்கான விருப்பத் தெரிவு எக்காரணத்தினாலும் பின்னர் மாற்றம் செய்ய முடியாது என்பதுடன் ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பத்தினை மாத்திரமே சமர்பிக்கலாம்.

V. விண்ணப்பதாரியின் ஒப்பத்தினை உறுதிப்படுத்துதல்

விண்ணப்பத்தில் ஒப்பத்தினை அதிகாரம் பெற்ற ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்தியின் ஒப்பத்தினை அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பகிரங்க நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் கெஸட் செய்யப்பட்ட பதவி ஒன்றினை வகிக்கும் அதிகாரி, ரூபா 498,960/- அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளம் பெறும் அரச, மாகாண அரசாங்க சேவை அல்லது பதவி நிலையில் நிரந்தர உத்தியோகம் வகிக்கும் அதிகாரி, பௌத்த விகாரை ஒன்றின் தலைமை மதகுரு, மதகுருக்களில் குறிப்பிடத்தக்க தரத்தில் அங்கம் வகிக்கும் ஒருவர் ஆகியவர்களில் ஒருவரால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

தற்போது தென் மாகாண அரசாங்க சேவையில் உள்ள ஒருவரின் ஒப்பத்தினை குறித்த திணைக்களத்தின் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் விண்ணப்பம் நிறுவனத் தலைவரினூடாக செலுத்தப்பட வேண்டும்.

VI. நிகழ் நிலை (Online) மூலம் விண்ணப்பங்கள் செலுத்தும் இறுதித் திகதி 2025.03.07 ஆகும்.

6. தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. இப் பரீட்சையை பிற்போடுதல், இரத்துச் செய்தல் அல்லது நடாத்திய பின் தெரிவு செய்தல்/ செய்யாதிருத்தல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய இறுதித் தீர்மானம் மற்றும் இவ்வறிவித்தலில் உட்படாத ஏதாவது மற்ற விடயங்கள் இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமையும் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியில் மேற்கொள்ளப்படும்.

8. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவதில்லை. நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும் விதம் தொடர்பில் தென் மாகாண கல்வி அமைச்சின் உத்தியோக இணைய தளத்தில் www.edumin.sp.gov.lk பிரசுரிக்கப்படும்,

9. வர்த்தமாணி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிதுள்ளார்கள் என்ற முடிவின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய விதத்தில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிகழ்நிலையில் செலுத்தியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் தகைமைகள் பூரணப்படுத்தியிருக்காத பட்சத்தில் நியமனம் வழங்குவதை நிராகரித்தல் அல்லது நியமனத்தை இரத்துச் செய்யும் அதிகாரம் தென் மாகாண கல்வி அமைச்சுக்கு உரியதாகும்,

10. இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிப் பிரயோகத்தில் ஏதேனும் ஒரு பொருத்தப்பாடின்மை ஏற்படின் சிங்களம் மூலமான மொழிப் பிரயோகம் ஏற்புடையதாகும்.

11. நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் இருந்து 14 நட்களுக்குள் பதவி பொறுப்பேற்றல் செய்யப்பட வேண்டும். இல்லாவிடின் முன் அறிவித்தலின்றி நியமனம் இரத்தாகும்.

12. இந்த அறிவித்தலினால் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் உரிமை தென் மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரித்தகும். குறித்த ஒரு வெற்றிட எண்ணிக்கையில் ஒரு பகுதியினை அல்லது பூரணமக ஆட் சர்ப்பு செய்தல் அல்லது செய்யாதிருத்தல் தொடர்பன இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமைதென் மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு உதித்தகும்,

உப அட்டவணை 01

வெற்றிடங்கள் காணப்படும் பாடங்கள் மற்றும் மொழி மூலம் இங்கு காட்டப்பட்டுள்ளது. அதற்கேற்ப விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் மொழி தெரிவு செய்யப்பட வேண்டும்.

| தொடர் இல. | பாடம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|
| 01 | ஆரம்பக் கல்வி | மொத்த கற்றல் காலப்பிரிவில் தமிழ் மொழி அல்லது தமிழ் மொழியியல் பாடத்தினை பிரதான பாடமாக கற்றுள்ள கலைமாணிப் பட்டம்<br>தகுதியுடைய விண்ணப்பதாரிகள் எண்ணிக்கை வெற்றிடங்களுக்கு போதிய அளவு இல்லாத பட்சத்தில் எந்த ஒரு பட்டத்தினையும் கருத்திற்கொள்ளப்படும். |
| 02 | ஆங்கிலம் | மொத்த கற்றல் காலப்பிரிவில் ஆங்கில மொழியினை பிரதான பாடமாக கற்றுள்ள பட்டம் ஒன்று அல்லது கலைமாணி (ஆங்கிலம்) விசேட பட்டம் TESL (Teaching English as a Second Language) அல்லது HND ஆங்கிலத்துடன் பட்டம் |
| 03 | நடனம் (சிங்களம் / உள்நாட்டு) | மொத்த கற்றல் காலப்பிரிவில் பிரதான பாடமாக நடனம் உள்ளடங்களாக உள்ள நுண்கலைமாணிப் பட்டம்/ அழகியற் கற்கை பட்டம் அல்லது கலை இளமாணி (நடனம்) பட்டம் அல்லது அரங்கேற்றக் கலைகள் இளமாணிப் பட்டம் |

| | | |
|---|---|---|
| 04 | நடனம் (பரதம்) | மொத்த கற்றல் காலப்பிரிவில் பிரதான பாடமாக பரத நாட்டியம் உள்ளடங்களாக உள்ள நுண்கலைமாணிப் பட்டம்/ அழகியற் கற்கை பட்டம் அல்லது கலை இளமாணி (நடனம்) பட்டம் அல்லது அரங்கேற்றக் கலைகள் இளமாணிப் பட்டம் |
| 05 | சங்கீதம் (கீழைத்தேய) | மொத்த கற்றல் காலப்பிரிவில் தமிழ் மொழி மூலத்தில் பிரதான பாடமாக கீழைத்தேய சங்கீதம் உள்ளடங்களாக உள்ள நுண்கலைமாணிப் பட்டம்/ அழகியற் கற்கை பட்டம் அல்லது கலை இளமாணி விஷேட (கீழைத்தேய சங்கீதம்) பட்டம் அல்லது அரங்கேற்றக் கலைகள் இளமாணிப் பட்டம் |
| 06 | சங்கீதம் (கர்நாடக) | மொத்த கற்றல் காலப்பிரிவில் தமிழ் மொழி மூலத்தில் பிரதான பாடமாக கர்நாடக சங்கீதம் உள்ளடங்களாக உள்ள நுண்கலைமாணிப் பட்டம்/ அழகியற் கற்கை பட்டம் அல்லது கலை இளமாணி விஷேட (கர்நாடக சங்கீதம்) பட்டம் அல்லது அரங்கேற்றக் கலைகள் இளமாணி (விஷேட) பட்டம் |
| 07 | நாடகமும் அரங்கியலும் | நாடகமும் அரங்கியலும் தமிழ் மொழி மூலத்தில் பிரதான பாடமாக உள்ள பொது அல்லது விஷேட பட்டம் |
| 08 | சித்திரம் | மொத்த கற்றல் காலப்பிரிவில் பிரதான பாடமாக சித்திரம் உள்ளடங்களாக உள்ள நுண்கலைமாணிப் பட்டம்/ அழகியற் கற்கை பட்டம் அல்லது கலை இளமாணி விஷேட (சித்திரம்) பட்டம் |
| 09 | விஞ்ஞானம் | உயிரியல் / இரசாயனவியல்/ பௌதீகவியல் பிரதான பாடமாக கற்றுள்ள விஞ்ஞான இளமாணிப் பொது அல்லது விஷேட பட்டம் |
| 10 | கணிதம் | கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம் பிரதான பாடமாக கற்றுள்ள விஞ்ஞான இளமாணிப் பொது அல்லது விஷேட பட்டம் |
| 11 | புவியியல் | மொத்த கற்றல் காலப்பிரிவில் பிரதான பாடமாக புவியியல் உள்ளடங்களாக உள்ள கலை இளமாணி பட்டம் |
| 12 | குடியியற் கல்வி | மொத்த கற்றல் காலப்பிரிவில் தமிழ் மொழி மூலத்தில் பிரதான பாடமாக சமூக நிர்வாகம் மற்றும் குடியியற் கல்வி கற்றுள்ள கலை இளமாணி பட்டம் அல்லது மானுடவியல் (விஷேட) பட்டம் |
| 13 | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் | வணிகமாணி பட்டம் / வணிக கற்கை துறைக்கு உரிய விஞ்ஞான இளமாணி பட்டம் / வணிக கற்கை துறைக்கு உரிய முகாமைத்துவ இளமாணி பட்டம் / வணிக கற்கை துறைக்கு உரிய தமிழ் மொழி மூலத்தில் எந்த ஒரு பட்டம் |
| 14 | இரண்டாம் மொழி (சிங்களம்) | மொத்த கற்றல் காலப்பிரிவில் பட்டத்திற்காக சிங்கள மொழியை பிரதான பாடமாக கற்ற கலைமாணி பட்டம் |
| 15 | மனைப் பொருளியல் | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அல்லது உயர் கல்வி அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்படும் பல்கலைக்கழகமொன்றின் தமிழ் மொழி மூலத்தில் மனையியல் கற்கைக்கான பட்டதாரியாக இருத்தல். |
| 16 | தமிழ் மொழியும் இலக்கியமும் | மொத்த கற்றல் காலப்பிரிவில் தமிழ் மொழியினை பிரதான பாடமாக கற்றுள்ள கலை இளமாணிப் பட்டம் |

| | | |
|---|---|---|
| 17 | வரலாறு | மொத்த கற்றல் காலப்பிரிவில் தமிழ் மொழி மூலத்தில் வரலாறு / தொல்லியல் பிரதான பாடமாக கற்றுள்ள கலை இளமாணிப் பட்டம் |
| 18 | சுகாதாரமும் உடற்கல்வியும் | விளையாட்டு விஞ்ஞான் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞான இளமாணி அல்லது விஞ்ஞான இளமாணி (உடற் கல்வி) விஷேட பட்டம் அல்லது உடற் கல்வி மற்றும் விளையாட்டு பிரதான பாடமாக கற்றுள்ள பட்டம் |
| 19 | கணக்கீடு | தமிழ் மொழி மூலத்தில் கணக்கீடு தொடர்பான விஷேட பட்டம் அல்லது கணக்கீட்டினை பிரதான பாடமாக் கொண்ட ஏதாவது ஒரு பட்டத்தினை பெற்றிருத்தல். |
| 20 | வணிகக் கல்வி | தமிழ் மொழி மூலத்தில் வணிகக் கல்வி அல்லது வணிக முகாமைத்துவத்திற்கு தொடர்பான பாடம் ஒன்றை பிரதான பாடமாக் கொண்ட ஏதாவது ஒரு பட்டத்தினை பெற்றிருத்தல். |
| 21 | பொருளியல் | தமிழ் மொழி மூலத்தில் பொருளியல் தொடர்பான விஷேட பட்டம் அல்லது பொருளியலை பிரதான பாடமாக கொண்ட ஏதாவது ஒரு பட்டத்தினை பெற்றிருத்தல். |
| 22 | தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியல் | தமிழ் மொழி மூலத்தில் தகவல் தொழில்நுட்ப பட்டம் அல்லது தகவல் தொழில்நுட்பம் பிரதான பாடமாக கற்றுள்ள பட்டம் ஒன்று. |
| 23 | ஆலோசனை | மொத்த கற்றல் காலப்பிரிவில் தமிழ் மொழி மூலத்தில் ஆலோசனை தொடர்பான பொது அல்லது விசேட பட்டம் |
| 24 | அரசியல் விஞ்ஞானம் | மொத்த கற்றல் காலப்பிரிவில் தமிழ் மொழி மூலத்தில் பிரதான பாடமாக சமூக நிர்வாகம் மற்றும் அரசியல் விஞ்ஞானத்தினை கற்றுள்ள கலை இளமாணி பட்டம் அல்லது மானுடவியல் (விஷேட) பட்டம் |
| 25 | இந்து நாகரீகம் | மொத்த கற்றல் காலப்பிரிவில் தமிழ் மொழி மூலத்தில் இந்து நாகரீகம் தொடர்பான பட்டம் |
| 26 | இஸ்லாமிய நாகரீகம் | மொத்த கற்றல் காலப்பிரிவில் தமிழ் மொழி மூலத்தில் இஸ்லாமிய நாகரீகம் தொடர்பான பட்டம் |
| 27 | அரபு | மொத்த கற்றல் காலப்பிரிவில் அரபு மொழி தொடர்பான பட்டம் |
| 28 | இஸ்லாம் | மொத்த கற்றல் காலப்பிரிவில் தமிழ் மொழி மூலத்தில் இஸ்லாம் தொடர்பான பட்டம் |
| 29 | கத்தோலிக்க சமயம் | மொத்த கற்றல் காலப்பிரிவில் தமிழ் மொழி மூலத்தில் கத்தோலிக்க சமயம் தொடர்பான பட்டம் |
| 30 | கிறிஸ்தவ சமயம் | மொத்த கற்றல் காலப்பிரிவில் தமிழ் மொழி மூலத்தில் கிறிஸ்தவ சமயம் தொடர்பான பட்டம் |
| 31 | உலோக நிர்மாண தொழில் நுட்ப கற்கைகள் | தொழில்நுட்ப இளமாணி பட்டம் இயந்திர (பொது) அல்லது இயந்திர தொழில்நுட்பம் (பொது) பிரதான பாடமாக கற்ற பட்டம் அல்லது உலோக நிர்மாண தொழில்நுட்பத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம் ஒன்று |

| | | |
|---|---|---|
| 32 | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் | விருந்தோம்பல் மற்றும் ஓய்வு முகாமைத்துவம் தொடர்பான நிர்வாக இளமாணி பட்டம் அல்லது சுற்றுலா முகாமைத்துவ விஷேட பட்டம் அல்லது புரவலன் சேவைகள் முகாமைத்துவ விஷேட பட்டம் அல்லது விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சி முகாமைத்துவ பட்டம் அல்லது சுற்றுலா முகாமைத்துவ பட்டம் அல்லது சுற்றுலா மற்றும் கலாசார வளங்கள் முகாமைத்துவ பட்டம் அல்லது வழிசெலுத்துதல் மற்றும் விருந்தோம்பல் பிரதான பாடமாக கொண்ட பட்டம் ஒன்று |
| 33 | மின் மற்றும் இலத்திரனியல் தொழில் நுட்ப கற்கைகள் | மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல் தொடர்பான விஞ்ஞான இளமாணி பட்டம் அல்லது பொறியியல் தொழில்நுட்ப விஞ்ஞான இளமாணி பட்டம் அல்லது பிரயோக இலத்திரனியல் விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞான இளமாணி விஷேட பட்டம் அல்லது மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம் ஒன்று. |

ஏ.யூ. வேலாரத்ன.
செயலாளர்
தென் மாகாண கல்வி அமைச்சு
தக்ஷினபாய,
லபுதூவ.

## தென் மாகாண தமிழ் மொழி மூல ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்துகொள்வதற்கான வெற்றிடங்கள்

| பாடசாலை | கணிதம் | விஞ்ஞானம் | ஆங்கிலம் | தமிழ் | ஆரம்பக் கல்வி | வரலாறு | புவியியல் | குடியியற் கல்வி | சித்திரம் | நடனம் | சங்கீதம் | நாடகமும் அரங்கியலும் | இரண்டாம் மொழி (சிங்களம்) | கிறிஸ்தவ சமயம் | கத்தோலிக்க சமயம் | இஸ்லாம் | தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியல் | அரபு | சுகாதாரமும் உடற்கல்வியும் | மனைப் பொருளியல் | இஸ்லாமிய நாகரீகம் | இந்து நாகரீகம் | அரசியல் விஞ்ஞானம் | கணக்கீடு | வணிகக் கல்வி | பொருளியல் | ஆலோசனை | உலோக நிர்மாண தொழில் நுட்ப கற்கைகள் | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் | மின் மற்றும் இலத்திரனியல் தொழில் நுட்ப கற்கைகள் | சங்கீதம் (கர்நாடக) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஹ/கிரிந்த முஸ்லிம் ம.வி. | 2 | 1 | 1 | | 2 | 1 | | 1 | 1 | | | | 1 | | | 1 | 1 | | 1 | | | | | | 1 | 1 | | | | | |
| ஹ/இக்ரா ஆ.பா. | | | | | 2 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| ஹ/எம்.ஆர்.தாஸிம் மு.க.வி. | | 1 | | 1 | 2 | | | | 1 | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| ஹ/பதகிரிய மு.க.வி. | 1 | | | | 5 | 1 | 1 | 1 | | | 1 | | | | | 1 | 1 | 1 | | | | | | | | | | | | | |
| ஹ/அல் அக்பர் மு.ம.வி. | | 1 | | | | | | | 1 | | | | | | | | 1 | | | | | | | | | | 1 | | | 1 | |
| ஹ/நலகம மு.க.வி. | 1 | | 1 | 1 | 2 | 1 | 1 | | | | | | 1 | | | 1 | | | | | | | | | 1 | | | | | | |
| ஹ/தங்காலை ம.வி. | 1 | 1 | 1 | | 3 | | | | | | | | | | | 1 | | | | | | | | | | | | | | | |
| ஹ/அல் அமீர் மு.ம.வி. | | | 1 | | 4 | | | | | | | | | | | | 1 | | | 1 | | | | 1 | | 1 | | | | | |
| மாறை/பெவர்லி த.ம.வி. | 1 | | 1 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | | | | | | | 1 | 1 | | | | | 1 | 1 | | | 1 | | | | | |
| மாறை/என்ஸல்வத்த த.ம.வி. | 1 | 1 | 1 | 2 | 2 | 1 | 1 | | 1 | 1 | | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | | 1 | | | | | | | | | | | | |
| மாறை/புனித மெதிவுஸ் இருமொழி | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | | 1 | 1 | | | | | 1 | | | | | 1 | 1 | | 1 | 1 | | | | | |
| மாறை/ஹன்பர்ட் த.ம.வி. | 1 | 1 | | 1 | 1 | 1 | 1 | 1 | | 1 | 1 | 1 | 1 | 1 | | | 1 | | 1 | | | 1 | 1 | | | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| மாறை/அனின்கந்த த.ம.வி. | | 1 | | 1 | 3 | 1 | | | | 1 | | 1 | | | 1 | | 1 | | | | | 1 | 1 | | | 1 | | | | | |
| மாறை/ஹுலந்தாவ த.ம.வி. | | | | | | | | | | 1 | 1 | 1 | | | 1 | | 1 | | | | | | | | | | | | | | |
| மாறை/கொடபிட்டிய ஸாதாத் மு.ம.வி. | | | | | | | | | | | | | | | | | | | | | 1 | | | | | | | | | | |
| மாறை/அன்னூர் மு.ம.வி. | | | | | | | | | | | | | | | | | | | 1 | | | | | | | | | | | | |
| மாறை/அஸ்ஸபா மு.ம.வி. | | | | | | | | | | | | | | | | | | | 1 | | | | 1 | | | | | | | | |
| மாறை/அல் மினா மு.ம.வி. | | | 1 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| கா/துந்துவ மு.ம.வி. | | | 1 | 2 | 4 | 1 | | 1 | | | | | | | | 1 | 1 | | | | | | | | 1 | | | | | | |
| கா/ராஸிக் பரீத் மு.ம.வி. | | | 1 | | | | | | 1 | | | | | | | 1 | | | 1 | | | | | | | | | | | | |
| கா/திவிதுர த.ம.வி. | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | | 1 | 1 | | | 1 | 1 | | | 1 | | 1 | | | 1 | 1 | | | | 1 | | | | 1 |
| கா/இகல்கந்த த.க.வி. | | | | 1 | 1 | | | 1 | | | | | | | | | | | | | | 1 | | | | | | | | | |
| கா/தல்கஸ்வல த.க.வி. | 1 | 1 | | 1 | 4 | 1 | | 1 | 1 | | | | | | | | 1 | | 1 | | | | | | | | | | | | |
| கா/ஸரஸ்வதீ த.ம.வி. | 1 | | | 2 | 4 | 1 | | | 1 | 1 | 1 | | | | | | 1 | | | | | 1 | 1 | | 1 | | | | | | |
| கா/ஸுலைமானியா ம.வி. | | | | | | | | | | | | | | | | | 1 | | | | | | | | | | | | | | |
| கா/உஸ்வதுன் ஹஸனா ம.வி. | | | | | | | | | | | | | | | | | 1 | | 1 | | | | | | | | | | | | |
| கா/வெலிதர மு.ம.வி. | | 1 | | 1 | 2 | | | | 1 | | | | 1 | | | | 1 | 1 | | | | | 1 | 1 | | | | | | | |
| | 12 | 11 | 11 | 17 | 46 | 12 | 7 | 8 | 11 | 6 | 5 | 5 | 6 | 3 | 3 | 8 | 17 | 2 | 9 | 1 | 1 | 7 | 8 | 2 | 5 | 6 | 3 | 1 | 1 | 2 | 2 |